Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/ 2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, மார்ச் 13 2024 | இதழ் 242

# நீங்கள் கொண்டு வந்த எந்த திட்டத்தை தடுத்தோம்? பிரதமர் சொல்லட்டும் உங்களது பொய், கட்டுக்கதைகள் இங்கு எடுபடாது - முதல்வர் ஸ்டாலின்

## அண்ணா தி.மு.க. ரூ பாரதீய ஜனதா கள்ளக் கூட்டணி: ஸ்டாலின் பேச்சு பொள்ளாச்சியில் 57,325 பேருக்கு ரூ.224 கோடி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

*சென்னை, 13 மார்ச் 2024:* அண்ணா தி.மு.க. பா.ஜ.க. கள்ளக் கூட்டணி அமைத்துள்ளது. இதனை மக்கள் அடையாளம் கண்டு விட்டார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாட்டுக்கு நீங்கள் கொண்டு வந்த எந்த திட்டத்தை நாங்கள் தடுத்தோம்? எய்ம்ஸ் மருத்துவமனையை தடுத்தோமா. இதற்கு பிரதமர் பதில் சொல்ல வேண்டும் என்று ஸ்டாலின் காட்டமாக கூறினார்.

பிரதமரின் கட்டுக்கதைகள் இங்கு எடுபடாது என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 560 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் 273 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 489 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பல்வேறு துறைகளின் சார்பில் 57,325 பயனாளிகளுக்கு 223 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

பொலிவு மிகுந்த பொள்ளாச்சி நகரில், கோவை-, நீலகிரி திருப்பூர், -ஈரோடு ஆகிய நான்கு மாவட்ட மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற எழுச்சிமிகு விழாவில் மகிழ்ச்சியோடு நான் பங்கேற்க வந்திருக்கிறேன்.

இந்த மாவட்டங்களுக்கெல்லாம் நான் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றிய மன உறுதியோடு, தெம்போடு, துணிவோடு உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.




உங்கள் எழுச்சியை பார்க்கின்றபோது நாடாளுமன்ற தேர்தலாக இருந்தாலும், பொது தேர்தலாக இருந்தாலும், எந்த தேர்தல் வந்தாலும் நாம் தான் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. சிந்தித்து, சிந்தித்து மக்களுக்கான முத்திரை திட்டங்களை உருவாக்கியதால் தான் தமிழ்நாட்டினுடைய தொழில்வளம் உயருகிறது. வேலைவாய்ப்பு பெருகுகிறது. பொருளாதாரம் வளருகிறது. ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னேறுகிறது.

அதைப் பார்த்து சிலர் பொறாமைப்பட்டு, தமிழ்நாட்டு மக்களையும், தமிழர்களின் உணர்வுகளையும் கொச்சைப்படுத்துகின்ற வகையில், பொய்களையும், அவதூறுகளையும் பரப்ப "வாட்ஸ் அப் யூனிவர்சிட்டி" நடத்துகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்கள் தக்க பாடம் புகட்டுகிற நேரம் வந்துவிட்டது.

அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கும் ஆட்சியாக கழக ஆட்சி செயல்பட்டு வருகிறது. பத்தாண்டு காலம் அண்ணா திமுக ஆட்சி தமிழ்நாட்டில் நடந்தது. அவர்களால் இப்படி பட்டியலிட்டுச் சொல்ல முடியுமா?

மேற்கு மண்டலத்தை தங்களுடைய கோட்டை என்று சொல்லிக்கொண்டார்களே! வாக்களித்த மக்களுக்கு அண்ணா திமுக ஆட்சி ஏதாவது நன்மை செய்ததா?

இத்தனைக்கும் மேற்கு மண்டலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அண்ணா திமுக ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தார்கள். அவர்கள் இந்த மேற்கு மண்டலத்துக்குச் செய்தது என்ன?

மகள்களை பெற்ற அத்தனை பெற்றோரையும் பதற வைத்தது பொள்ளாச்சி சம்பவம். மறந்திட முடியுமா! பெண்களை மிரட்டி ஆபாசப்படம் எடுத்தவர்கள் தைரியமாக அண்ணா திமுக ஆட்சியில் வலம் வந்தார்கள். புகார் கொடுத்தவர்களை மிரட்டினார்கள்.

திமுக மகளிரணி சார்பில்தான், போராட்டம் நடத்தினார்கள். பிறகு, நடவடிக்கை எடுப்போம் என்று ஒரு நாடகம் போட்டார்கள். ஆனால், சாட்சிகள் மிரட்டப்படுகின்ற வேடிக்கையைப் பார்த்தார்கள்.

பத்திரிக்கையாளர்கள் இதுபற்றி அன்றைய முதலமைச்சர் பழனிசாமியைக் கேட்டபோது, "அப்படியெதுவும் இல்லை. ஆதாரம் இருந்தால் கொடுங்க" என்று சொன்னார். நான் அப்போது தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது சொன்னேன். இதை நான் சும்மா விடமாட்டேன். நிச்சயமாக, இதற்குரிய நடவடிக்கையை இந்த ஸ்டாலின் உறுதியாக எடுப்பான் என்று அப்போதே நான் உறுதி தந்திருக்கிறேன். இன்றைக்கும் மறந்துவிடவில்லை.

பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளம் தெரியக்கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கும் நிலையில், அந்தப் பெண்ணுடைய பெயரையும், முகவரியையும் வெளிப்படையாக அறிவித்த அக்கறையற்ற ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி.

அந்த வழக்கு சிபிஐ விசாரித்து இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறது. அதுமட்டுமா! முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில், கொலை, கொள்ளை, தற்கொலை சம்பவம் நடந்தது இல்லையா!

அமைதி வழியில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக, போராடியவர்கள் மேல் தாக்குதல் நடத்தியது யார் ஆட்சியில்? பெண் போலீஸ் எஸ்.பி.க்கே பாதுகாப்பு இல்லாத வகையில் ஆட்சி நடத்தியது யார்?

தூத்துக்குடியில், 13 பேர் துப்பாக்கியால் சுட்டு கொன்றது யாருடைய ஆட்சியில்?

கஞ்சா குட்கா மாமூல் பட்டியலில், அமைச்சரும், டி.ஜி.பி.யுமே இருந்தார்களே, அது யாருடைய ஆட்சியில்? அந்த வழக்கில் குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்ய விடாமல் தடுத்த கூட்டணிதான், இன்றைக்கு உத்தமர் வேஷம் போடுகிறார்கள். இந்தக் கூட்டணி மறுபடியும் மக்களை ஏமாற்றி பிரிந்த மாதிரி நடித்துக்கொண்டு வருகிறார்கள். நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டு நலனுக்கும், தமிழர்களின் நலனுக்கும் எதிரான அண்ணா திமுக பா.ஜ.க. கள்ளக் கூட்டணி ஒருபக்கம் என்றால், தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாட்டை வளமாக்க தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க மற்றொரு பக்கம் ஜனநாயகச் சக்திகளும் - தி.மு.க.வும் ஒற்றுமையாக நிற்கிறோம்.

ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாத போதே, இத்தனை சாதனை திட்டங்களை நம்மால் கொடுக்க முடிகிறது என்றால், நமக்கு உதவி செய்கின்ற ஒன்றிய அரசு அங்கே அமைந்திருந்தால், இன்னும் பத்து மடங்கு சாதனைகளை இந்த திமுக செய்திருக்கும். அதற்கான நேரம் நெருங்கி வருகிறது.

நாட்டு மக்களுக்கு எதையுமே செய்து தராத பிரதமர், 'மோடியின் உத்தரவாதம்' என்று பக்கம் பக்கமாக விளம்பரம், டிவி-யில் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிரதமர் மோடி கொடுத்த பழைய உத்தரவாதமான ஒவ்வொருவருக்கும் 15 லட்சம் ரூபாயின் இன்றைய கதி என்ன?

இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு உத்தரவாதம் தந்தீர்களே அதன் கதி என்ன? அதை சொல்லுங்கள். அதுகூட வேண்டாம், அடுத்த ஒரு வாரத்தில் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வருவதாக செய்தி வந்திருக்கிறது. வரப்போகிறார்.

தமிழ்நாட்டுக்குச் செய்து தந்திருக்கின்ற சிறப்புத் திட்டங்களை பட்டியலிடுங்கள். என்ன சிறப்பு திட்டங்கள் கொண்டு வந்தீர்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் எல்லாரும் கேட்கவேண்டும். "பதில் சொல்லுங்க பிரதமரே.." என்று எல்லோரும் கேட்க வேண்டும்.

கடந்த முறை வந்தபோது பேசுகிறார்ஞ் பா.ஜ.க. தமிழ்நாட்டுக்கு கொண்டு வருகின்ற திட்டங்களை தி.மு.க. தடுக்கின்றது என்று பிரதமர் சொல்கிறார். அவர் கொண்டு வந்த திட்டங்களை, நாம் சென்று தடுக்கிறோமா!

நீங்கள் ஒரு பழமொழி கேட்டிருப்பீர்கள், அண்ட புளுகு ஆகாசப் புளுகுனு சொல்லுவார்கள் அது மாதிரி, இது மோடி புளுகு! அவர் என்ன திட்டத்தை கொண்டு வந்தார்; நாம் தடுப்பதற்கு? எந்த திட்டத்துக்கு நாம் தடையாக இருந்தோம் என்று சொல்வாரா?

நான் ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை 2014-ல் அறிவித்தார்கள். அப்போது யார் தமிழ்நாட்டில் முதலமைச்சர்? மறைந்த ஜெயலலிதா இருந்தார். அவர் தடுத்தாரா? இல்லையே.

அடுத்து, உங்கள் நண்பர்கள் ஓ.பி.எஸ், இ.பி.எஸ் தடுத்தார்களா? இல்லையே. 2021-ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம், நாங்கள் தடுத்தோமா? இல்லை, தமிழ்நாட்டு மக்கள்தான் தடுத்தார்களா? இல்லையே? உங்களை யாரும் தடுக்கவில்லையே. ஆட்சியில் இருந்த பத்து வருஷமாக தமிழ்நாட்டை திரும்பி பார்க்காமல், தேர்தலுக்காக பத்து நாள் வந்து பொய் சொன்னால் தமிழ்நாட்டு மக்களான நாங்கள் என்ன ஏமாளிகளா? நாங்கள் என்ன இளிச்சவாயன்களா?

பொய்யும், வாட்ஸ் அப் கதைகளும்தான் பா.ஜ.க.வின் உயிர்மூச்சு. இனி இந்த பொய்களும் கட்டுக்கதைகளும் மக்களிடம் எடுபடாது.

மாநிலத்தைக் கெடுத்த அண்ணா திமுக - மாநிலத்தை கண்டு கொள்ளாத பா.ஜ.க. இந்த கள்ளக்கூட்டணியை மக்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலனே முக்கியம் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய, திராவிட மாடல் அரசுக்கு, தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் துணை இருப்பது போல், உண்மையான வளர்ச்சியை நமது நாடு காண, ஒட்டுமொத்த இந்திய மக்களும் தயாராகிவிட்டார்கள். பாசிசத்தை வீழ்த்த, இந்தியாவை காக்க உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன். தமிழ்நாட்டை உயர்த்துவோம்! இந்தியாவை காப்போம்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, சு.முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், கா. ராமச்சந்திரன், என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.ஆர். நடராசன், கே. சண்முகசுந்தரம், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், பொங்கலூர் பழனிச்சாமி, கோயம்புத்தூர் மாவட்ட கலெக்டர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் எம்.கோவிந்த ராவ் மற்றும் மருத்துவத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்.





PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# பொறியியல் பட்டதாரிகள் தினக்கூலிகளாகவும் பி.எச்.டி. படித்தவர்கள் பியூன் வேலைக்கும் விண்ணப்பிக்கிறார்கள் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை



சென்னை, 13 மார்ச் 2024: மோடி ஆட்சியில் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டத்தால் பொறியியல் பட்டதாரிகள் தினக்கூலிகளாகவும் பி.எச்.டி. படித்தவர்கள் பியூன் வேலைக்கும் விண்ணப்பிக்கிறார்கள் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை சாடியுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறி இருப்பதாவது:

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவோம் என வாக்குறுதி வழங்கி 10 ஆண்டு ஆட்சியை பிரதமர் மோடி நிறைவு செய்ய இருக்கிறார். வாக்குறுதியின்படி 20 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு வேலையின்மை 1 கோடியாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் வேலையின்மை 4 கோடியாக அதிகரித்துள்ளது.

இளநிலை மற்றும் முதுநிலை பட்டதாரிகளில் 33 சதவிகிதம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தால் பொறியியல் பட்டதாரிகள் தினக்கூலிகளாகவும், பி.எச்.டி. படித்தவர்கள் ரயில்வே துறையில் பியூன் வேலைக்கும் விண்ணப்பிக்கிறார்கள். இந்நிலையில், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம் உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பை சாக்காக வைத்துக் கொண்டு மண்டல வாரியான தேர்வு முறையை ஒழித்துக்கட்டியுள்ளது.

இதன் விளைவாக தேர்வுகள் அனைத்தும் தலைநகர் டெல்லியில் நடத்துகிற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தேர்வின் மூலமாக 90 சதவிகிதத்திற்கும் மேலாக இந்தி பேசும் மாநிலங்களிலிருந்தே பணி நியமனங்கள் நடைபெறுகிறது. தென்மாநிலங்களில் இருந்து பெயரளவுக்கு 5 அல்லது 10 சதவிகிதத்தினர் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர்.

எடுத்துக்காட்டாக, சி.ஏ.ஜி. தலைமையிலான கணக்கு தணிக்கை அலுவலகத்தை எடுத்துக் கொண்டால் அந்த அலுவலகங்களில் சரிபாதிக்கு மேல் இந்தி பேசும் மாநில ஊழியர்கள் தான் அமர்த்தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் பணியாற்றும் இந்தி பேசும் பணியாளர்கள் தமிழே தெரியாமல் எப்படி கணக்கு தணிக்கையை ஆய்வு செய்ய முடியம்?

பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் தற்போது இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே நடைபெறுகிறது. பழைய முறைப்படி மண்டல வாரியாக சென்னை போன்ற நகரங்களில் தேர்வு நடத்தப்பட்டு அதன்படி பணியாளர்களை நியமனம் செய்தால் மட்டுமே அந்தந்த மாநிலங்களைச் சார்ந்தவர்கள் அந்தந்த மாநிலங்களில் பணியாற்றுவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

அண்மையில், பணியாளர் தேர்வாணையத்தில் ஜூன் 2024 முதல் ஜூலைக்குள் 41,233 காலிப் பணியிடங்களுக்கு இணையதளத்தின் மூலம் தேர்வு நடத்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த தேர்வுகள் இந்தி மற்றும் ஆங்கிலத்தோடு பிற மாநில மொழிகளில் ஒன்றான தமிழிலும் நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறோம். இந்த கோரிக்கையை ஏற்பதன் மூலம், ஒன்றிய அரசு அலுவலகங்களில் அந்தந்த மாநில மொழி தெரிந்தவர்களே பணியில் நியமிக்கப்படக் கூடிய வாய்ப்பு ஏற்படும். அப்படி நியமிக்கப்பட்டால் தான் ஒன்றிய அரசின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும். இந்த கோரிக்கை ஏற்கப்படவில்லையெனில், கடுமையான போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் மீது ராக்கெட்டுகளை வீசி லெபனான் போராளிக் குழு தாக்குதல்

சென்னை, 13 மார்ச் 2024: லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்புல்லா அமைப்பு வடக்கு இஸ்ரேல் மீது 100க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த ஆண்டு முதல் தாக்குதல் சம்பவம் நடந்து வருகிறது. இருதரப்பும் மாறி மாறி தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து காசா மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்தி வந்தாலும், இந்த போரில் லட்சக்கணக்கான பாலஸ்தீன மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து, பலர் அத்தியாவசிய பொருட்கள் இல்லாமல் தவித்து வருகின்றனர். இதனால் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், கடந்த சில நாட்களுக்கு முன்னதாக பாராசூட் மூலம் காசா மக்களுக்கு உணவு பொட்டலங்கள் வினியோகம் செய்தது.

அப்போது, பாராசூட் செயல்படாமல் உணவு பொட்டலங்களுடன் மக்கள் மீது விழுந்ததில் ஐந்து பேர் பரிதாபமாக உயிரழந்தனர். இந்த நிலையில், லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்புல்லா அமைப்பு வடக்கு இஸ்ரேல் மீது 100க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இது கடந்த சில நாட்களில் மிகப்பெரிய தாக்குதலாக பார்க்கப்படுகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக வடகிழக்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் குறைந்தது இரண்டு பேர் கொல்லப்பட்ட நிலையில், 20 பேர் காயமடைந்தனர். மேலும், இந்த வான்வழித் தாக்குதல்களில் உணவுப் பொருட்களை சேமித்து வைத்திருந்த கிடங்கு ஒன்று அழிந்ததாக கூறப்படுகிறது.

லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கில் இஸ்ரேலிய ராணுவம் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாகவும், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையிலும், இஸ்ரேல் மீது இந்த சரமாரியான தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

# தாம்பரம், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, நாகர்கோவில் 6 மாநகராட்சிகளில் ரூ. 288 - கோடியில் உயிரி எரிவாயு கலன் அமைக்கும் பணி: ஸ்டாலின் அனுமதி

சென்னை, 13 மார்ச் 2024: மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 6 மாநகராட்சிகளில், தனியார் பங்களிப்புடன் செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன் அமைக்கும் பணியினை ரூ.288.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூய்மை இந்தியா திட்டத்தின் தொடர்ச்சியாக, நீடித்த நிலையான தூய்மைப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக 2021 ம் ஆண்டு அக்டோபர் 1 ம் நாள் தூய்மை இந்தியா திட்டம் 2.0 தொடங்கப்பட்டது.

அனைத்து நகரங்களையும் குப்பைகள் இல்லாத நகரங்களாகவும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாகவும் மாற்றுவதே தூய்மை இந்தியா திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள் ஆகும்.

நகராட்சி திடக்கழிவுகளை கையாளுவதற்கு தகுந்த தொழில்நுட்பங்களின் ஒன்றான செறிவூட்டி அழுத்தப்பட்டு உருளைகளில் உயிர்-வாயு அடைக்கப்பட்டு பயன்படுத்தும் வகையிலான ஆலைகளை அமைத்து பராமரிக்க வேண்டியுள்ளது. மேலும், மாநகராட்சிகளில் ஈரமான கழிவுகளை கையாளும் திறனை மேம்படுத்துவதுடன், உயிரி எரிவாயுவை தினசரி உற்பத்தி செய்தும் பயன்படுத்துவதும் ஆலையின் முக்கிய நோக்கமாகும்.

9 மாநகராட்சிகளில் செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன்கள் அமைக்கும் செயல் திட்டத்திற்கு, 2023 -2024 சட்டமன்ற மானிய கோரிக்கையின் போது நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நேரு அறிவித்தார்.

மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், தஞ்சாவூர், நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 9 மாநகராட்சிகளில், உயிரி எரிவாயு தயாரிக்க, பொது தனியார் பங்களிப்புடன் தினமும் 930 மில்லியன் டன் திறன் கொண்ட புதிய உயிரி எரிவாயு ஆலைகள் அமைக்கப்படும்".

இதனைத்தொடர்ந்து, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 6 மாநகராட்சிகளில், தனியார் பங்களிப்புடன் செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன் அமைக்கும் பணியினை ரூ.288.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# போதைப் பொருள் கடத்தல் வழக்கில் ஜாபர் சாதிக் கூட்டாளி கைது

சென்னை, 13 மார்ச் 2024: போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைதான தி.மு.க., முன்னாள் நிர்வாகி ஜாபர் சாதிக்கின் கூட்டாளி சதா என்பவரை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் சென்னையில் கைது செய்தனர்.

சர்வதேச போதை பொருள் கடத்தல் கும்பல் தலைவனாக செயல்பட்ட தி.மு.க.,வின் முன்னாள் சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக இருந்த ஜாபர் சாதிக் டில்லியில் கைது செய்யப்பட்டார். அவரை, மத்திய போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகள், ஏழு நாள் காவலில் எடுத்து டில்லியில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், உணவுப் பொருட்களுடன் போதைப் பொருட்களை கலந்து கடத்தலுக்கு உதவிய ஜாபர் சாதிக்கின் கூட்டாளி சதானந்தம் என்ற சதா என்பவரை மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் சென்னையில் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொண்டு தமிழர்களின் விருந்தோம்பலில் மகிழுங்கள்: ஸ்பெயின் பயணிகளுக்கு கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன் அழைப்பு

சென்னை, 13 மார்ச் 2024: ஸ்பெயின் நாட்டின் சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொண்டு தமிழர்களின் விருந்தோம்பலில் மகிழ வேண்டும் என - தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரின் மெஜஸ்டிக் ஓட்டலில் 11 ந் தேதி அன்று தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறையின் மூலம் சுற்றுலா, பண்பாடு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன் தலைமையில் ‘ரோடு ஷோ’ சுற்றுலா கவன ஈர்ப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பரத நாட்டிய நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும், தமிழ்நாட்டின் சுற்றுலா சார்ந்த திட்டங்கள் மற்றும் தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அக்கார்ட் ஓட்டல் மற்றும் ரிசார்ட்ஸ், கால்டன் சமுத்திரா, சோழன் டூர்ஸ், சன்யாக் குப்தா டிராவல்ஸ், ஈகா டிராவல்ஸ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலா இயக்குநரகம் ஆகிய சுற்றுலா பங்குதாரர்கள் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 33 சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், முகவர்கள் மற்றும் சுற்றுலா அமைப்பாளர்களுடன் மேற்கொண்ட வணிக ரீதியான கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலாத்தலங்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலாக்கள் குறித்து விளக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன் பேசியதாவது:

தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை, ஏலகிரி என மலைவாழ் சுற்றுலா தலங்களும், குற்றாலம், திற்பரப்பு நீர்வீழ்ச்சி, கொடைக்கானல் வெள்ளி அருவி, கொல்லிமலை ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி என புகழ் பெற்ற நீர்வீழ்ச்சிகளும் உள்ளன.

தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த ஆயிரக்கணக்கான கோயில்கள், பண்பாட்டு சிறப்பு வாய்ந்த சுற்றுலாத்தலங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் மாமல்லபுர நினைவுச் சின்னங்கள், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், அரியலூர் கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில், தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில், நீலகிரி மலை ரெயில், மேற்கு தொடர்ச்சி மலை ஆகிய யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட 6 உலக பாரம்பரிய சின்னங்களும், இந்திய தொல்லியல் துறையின் கீழ் உள்ள 411 நினைவுச் சின்னங்களும் அமைந்துள்ளன.

தமிழ்நாடு, உலகிலேயே இரண்டாவது பெரிய கடற்கரையான மெரினா கடற்கரை, மாமல்லபுரம் கடற்கரை என சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி கடற்கரை வரையில் 1,076 கி.மீ நீளத்திற்கு, இந்தியாவின் மொத்த கடற்கரைகளின் நீளத்தில் 13 சதவிகிதத்தை கொண்டுள்ளது.

வேடந்தாங்கல், பழவேற்காடு ஏரி, வடுவூர் பறவைகள் சரணாலயம் உள்ளிட்ட 17 பறவைகள் சரணாலயங்களுக்கு வருடந்தோறும் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் இருந்து பறவைகள் வருகை தந்து சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்து படைக்கின்றன.

நீலகிரி முதுமலை தேசிய பூங்கா, முகூர்த்தி தேசிய பூங்கா, பொள்ளாச்சி இந்திரா காந்தி தேசிய பூங்கா, கிண்டி தேசிய பூங்கா, மன்னார் வளைகுடா கடல்வாழ் தேசிய பூங்கா என 5 தேசிய பூங்காக்களும், 17 வன உயிரின சரணாலயங்களும் அமைந்துள்ளன.

முதலமைச்சரின் நடவடிக்கைகளால் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கண்டறியப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இங்கு வருகை தந்துள்ள சுற்றுலா பங்குதாரர்கள் ஸ்பெயின் நாட்டின் சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள பயணத்திட்டங்களை தொகுத்து, தமிழ்நாட்டிற்கு வருகை தந்து தமிழர்களின் வரவேற்பிலும், பண்பாட்டிலும், விருந்தோம்பலிலும் மகிழ வேண்டும். இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் பத்மஸ்ரீ மோகன்மல் சோர்டியா தங்கக் கோப்பை கிரிக்கெட் போட்டடியின் தொடக்க விழா



சென்னை, 13 மார்ச் 2024: சென்னையில் உள்ள முன்னணிக் கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, பத்மஸ்ரீ மோகன்மல் சோர்டியா நினைவாக நடத்தப்படும் கல்லூரிகளுக்கிடையேயான ஆடவர் டி-20 பத்மஸ்ரீ மோகன்மல் சோர்டியா தங்கக் கோப்பை கிரிக்கெட் போட்டியைத் தொடக்கி வைத்தது. இப்போட்டியினைக் கல்லூரியின் நிர்வாகக்குழு உறுப்பினர் திரு ஸ்ரீ ஹேமந்த் துகர் அவர்கள் கல்லூரியின் புதிய மட்டைப் பந்து (கிரிக்கெட்) மைதானத்தில் இன்று தொடங்கிவைத்தார். மிகுந்த உற்சாகம் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கிடையில் போட்டிதொடங்கி□யது. மாணவர்களிடம் தோழமை உணர்வையும் விளையாட்டுத்திறனையும் ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்படும் பத்மஸ்ரீ மோகன்மல் சோர்டியா தங்கக் கோப்பை மட்டைப் பந்துப் (கிரிக்கெட்) போட்டியில் சென்னை முழுவதும் உள்ள 24 கல்லூரிகளின் அணிகள் பங்கேற்கும் இப்போட்டி மாணவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது. வி.ஐ.டி., ராஜலட்சுமி இன்ஜினியரிங், லயோலா, குருநானக், தியாகராய கல்லூரி, பச்சையப்பாஸ், எம்.சி.சி., நந்தனம் கலை, புதுக்கல்லூரி, டி.ஜி.வைணவக் கல்லூரி ஆகியவை இப்போட்டியில் கலந்துகொள்ளும் கல்லூரிகளில் குறிப்பிடத் தகுந்தவைகள். நாக்-அவுட் முறையில் நடத்தப்படும் இப்போட்டிகள் மார்ச் 28, 2024 அன்று நடைபெறும் இறுதிப் போட்டியுடன் முடிவடையும்.

தொடக்க விழாவின் போது பேசிய ஸ்ரீ ஹேமந்த் துகர் அவர்கள் 'ஜெயின் கல்லூரியில் இப்போட்டி நடத்தப்படுவதன் காரணம், "கல்லூரி மாணவர்களின் திறமையையும்விளையாட்டுத் திறனையும் மேம்படுத்த வேண்டும் என்பதே. உயர்தர வசதிகளுடன் தொடங்கப்பட்டுள்ள ,புதிய மட்டைப் பந்து (கிரிக்கெட்) மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகள் மாணவர்களின் திறமைகளை வளர்த்தெடுக்கவும் அவர்கள் தடகளப் பயிற்சிகளில் சிறந்து விளங்குவதற்கான தளமாகவும் அமையும். புதிய மட்டைப் பந்து (கிரிக்கெட்) மைதானம் விளையாட்டின் தரத்தை உயர்த்துவது மட்டுமல்லாமல் பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு மிகச் சிறந்த அனுபவத்தைத் தருவதாகவும் அமையும்' என்றார்.

கல்லூரியின் புலத்தலைவர் முனைவர் எம்.எம். ரம்யா அவர்கள் பேசுகையில் "அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் சார்பாக ஆண்டுதோறும் நடத்தப்படும் பத்மஸ்ரீ மோகன்மல் சோர்டியா தங்கக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்துவதில் நாங்கள் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். எங்களின் புதிய மட்டைப்பந்து ( கிரிக்கெட் )மைதானம் மாணவர்களுக்கு இத்துறையில் நல்லதொரு முறையான விளையாட்டுப் பயிற்சியை வழங்கும். இந்நிகழ்வின் நோக்கம், பாடப்புத்தகங்களில் தேர்ச்சி பெறுவது மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே. இதுபோன்றதொரு சிறப்பு வாய்ந்த நிகழ்வை நடத்துவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்" என்று கூறினார்.

## ஆவணங்களை தேர்தல் ஆணையத்திடம் வழங்கிவிட்டோம் 5 ஆண்டில் 22,217 தேர்தல் பத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன: எஸ்.பி.ஐ தகவல் சுப்ரீம் கோர்ட்டில் பிரமாண பத்திரம் தாக்கல்

சென்னை, 13 மார்ச் 2024: தேர்தல் நன்கொடை பத்திர விவரங்கள் அடங்கிய ஆவணங்களை தேர்தல் ஆணையத்திடம் வழங்கிவிட்டோம் என்று சுப்ரீம் கோர்ட்டில் பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) தலைவர் பிரமாணப் பத்திரத்தில் தெரிவித்துள்ளார்.

ஆவணங்களை 2 கோப்புகளாக பென் டிரைவில் தேர்தல் ஆணையத்திடம் வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோப்பில், தேர்தல் நன்கொடை பத்திரங்களை வாங்கியவர்கள், வாங்கிய தேதி, தொகை குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன. பயன் பெற்ற கட்சிகளின் விவரங்கள் 2வது கோப்பில் வழங்கப்பட்டுள்ளது என்று பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ம் ஆண்டு ஏப்ரல் 1 ந்தேதி முதல் பிப்ரவரி 15 ம் தேதி வரை 22,217 தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளதாகவும், அதில் 22,030 பத்திரங்களை அரசியல் கட்சிகள் பணமாக மாற்றிக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

2019ம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி முதல் 2024ம் ஆண்டு பிப்ரவரி 15ம் தேதிக்கு உள்பட்ட காலக்கட்டத்தில் ஒட்டுமொத்தமாக 18,871 தேர்தல் நன்கொடை பத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. 20,421 பத்திரங்கள் பணமாக்கப்பட்டுள்ளன.

2019 ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் ஏப்ரல் 11ம் தேதிக்குள் அதாவது 11 நாள்களில் 3,346 தேர்தல் நன்கொடை பத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. அதில், 1609 பணமாக்கப்பட்டுள்ளன என்று எஸ்பிஐ தெரிவித்துள்ளது.

தனிநபர்களும், நிறுவனங்களும் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நன்கொடை வழங்க அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் பத்திர திட்டத்தை ரத்து செய்து கடந்த மாதம் 15ந் தேதி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தது.

மேலும், இதுவரை தேர்தல் பத்திரங்களை பெற்றவர்கள், நன்கொடை வாங்கிய அரசியல் கட்சிகள் உள்ளிட்ட விவரங்களை மார்ச் 6-ந் தேதிக்குள் தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிக்குமாறு பாரத ஸ்டேட் வங்கிக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.ஆனால், இந்த கால அவகாசத்தை ஜூன் 30-ந் தேதி வரை நீட்டிக்குமாறு கடந்த 4-ந் தேதி சுப்ரீம் கோர்ட்டில் பாரத ஸ்டேட் வங்கி மனு தாக்கல் செய்தது. ஆனால் நேற்று முன்தினம் அம்மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது. ஏற்கனவே உத்தரவிட்டபடி, தேர்தல் பத்திர விவரங்களை 12-ந் தேதி (நேற்று) மாலைக்குள் தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிக்குமாறு ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் கமிஷனிடம் பாரத ஸ்டேட் வங்கி நேற்று மாலை சமர்ப்பித்தது.

ஸ்டேட் வங்கி சமர்ப்பித்த தேர்தல் பத்திர விவரங்களை சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி, 15ந் தேதி மாலை 5 மணிக்குள் தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தேர்தல் கமிஷன் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## டி வி எஸ் ஐகியூப் தமிழ்நாட்டில் 20000 வாகனங்களுக்கு மேலான மைல்கல் விற்பனையின் மூலம் துரித வளர்ச்சியைத் தொடர்கிறது

சென்னை, 13 மார்ச் 2024: இரு மற்றும் மூன்று சக்கர வாகனப் பிரிவுகளில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் உலகளாவிய வாகன உற்பத்தி நிறுவனமான டி.வி.எஸ் மோட்டார் நிறுவனம், தனது டி வி எஸ் ஐகியூப் சீரீஸ் வாகனங்கள் தமிழ்நாடு முழுவதும் 20000-க்கும் அதிகமாக விற்பனை என்ற மைல்கல்லை எட்டியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தியா முழுவதும் 2.5 லட்சத்திற்கும் அதிகமான டி வி எஸ் ஐகியூப் வாகனங்கள் விற்பனை செய்யப்படுவதால், இந்த துரிதமான வளர்ச்சி மின்சார வாகன பயன்பாட்டுக்கு உத்வேகமளிப்பதாக இருக்கிறது.



இந்த மின்சார வாகனப் புரட்சியை முன்னெடுக்கும் வகையில், டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் மேலும் புதிய சலுகைகளை அறிவித்துள்ளது, இதன் தொடர்ச்சியாக, சென்னையில் இப்போது வாடிக்கையாளர்கள் டி வி எஸ் ஐகியூப் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்களை வாங்கும் போது, ஃபேம் 2 மானியத்துடன் கூடுதலாக 15,499 ரூபாய் வரை பலனடையும் திட்டத்தை அறிவித்திருக்கிறது.. இதனால் டி வி எஸ் ஐகியூப் எலெக்ட்ரிக் ஸ்கூட்டர்களின் சிறப்பு விலை 135,157 ரூபாய் முதல் ஆரம்பமாகிறது.

டி வி எஸ் ஐகியூப், பரபரப்பான நகர்ப்புறங்களில் பயணிக்கும் வாடிக்கையாளர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டிருப்பதால், அதன் மேம்பட்ட சிறப்பு அம்சங்களுடன் தனித்துவமிக்கதாக திகழ்கிறது. மிக வலுவான ஆற்றல் கொண்ட 3.4 கே டபிள்யூ எச் பேட்டரி பொருத்தப்பட்டிருப்பதோடு, அன்றாடம் 100 கிலோமீட்டர்கள் பயணிக்கும் வாய்ப்பை அளிக்கிறது. இதன் மூலம் டி வி எஸ் ஐகியூப் -பயணிப்பவர்களுக்கு தங்கு தடையற்ற மற்றும் நம்பகமான ஒரு பயண அனுபவத்தை உறுதி செய்கிறது. அதன் இருக்கைக்கு அடியில் வடிவமைக்கப்பட்டிருக்கும் விசாலமான 31-லிட்டர் அளவிலான சேமிப்பக பகுதி அத்தியாவசிய பொருட்களைப் பத்திரமாக பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு தாராளமான இடத்தை அளிக்கிறது, அதே நேரத்தில் டி வி எஸ் ஐகியூப்-ன் பெரிய ஃபுட்போர்ட் மற்றும் அகலமான இருக்கை போன்ற அன்றாட பயன்பாட்டுக்கு அவசியமான அம்சங்கள் எளிதில் சவாரி செய்ய உதவுவதோடு, கூடுதல்சௌகரியத்தையும் அளிக்கின்றன. மேலும், டி வி எஸ் ஐகியூப் 30 பைசா செலவில் ஒரு கிலோமீட்டர் பயணிக்க முடியுமென்கிற அளவுக்கு மிகக் குறைந்த பயணிக்கும் செலவின் மூலம் வாடிக்கையாளர்கள் மூன்று ஆண்டுகளில் 1.2 லட்சம் ரூபாய் வரை சேமிப்பை பெற முடியும். 7 அங்குல டிஎஃப்டி திரை மற்றும் அதிக டிசைன்கள் இல்லாமல் எளிமையான முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கு பயன்பாட்டு இயங்குதளமான யூ ஐ, குரல் உதவி, அலெக்சாவைப் பயன்படுத்த உதவும் டி வி எஸ் ஐகியூப் அலெக்ஸா ஸ்கில்செட்,, உங்களது ரசனையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் செயல்படும் மியூசிக் ப்ளேயர் கட்டுப்பாடு, ஓ டி ஏ அப்டேட்கள், எங்குச் சென்றாலும் எளிதில் செருகி பயன்படுத்துவதற்கு ஏற்ற வேகமாக சார்ஜ் செய்யும் பளக் அண்ட் ப்ளே சார்ஜர், ரிவர்ஸ் பார்க்கிங் உதவி, வாகன செயல்பாடு ஆரோக்கியமானதாக இருக்கிறதா என்பதை கண்டறிய உதவும் வெஹிகிள் ஹெல்த் மற்றும் பாதுகாப்பு குறித்த அறிவிப்புகள் [7" டி எஃப் டி ஸ்க்ரீன் கிளீன் யூ ஐ வாய்ஸ் அசிஸ்ட்டிவிஎஸ் ஐக்யூப் அலெக்ஸா ஸ்கில் செட் இன்குயூட்டிவ் மியூசிக் பிளேயர் கண்ட்ரோல் ஓ டி ஏ அப்டேட்கள் ஃபாஸ்ட் சார்ஜிங் வித் எ பிளக் அண்ட் ப்ளே கேரி அலாங் சார்ஜர் ரிவர்ஸ் பார்க்கிங் அசிஸ்டன்ட் வேகிக்கிள் ட்ராக்கிங் வெஹிக்கில் ஹெல்த் அண்ட் சேஃப்டி நோட்டிபிகேஷன்,] உள்ளிட்ட 118-க்கும் மேற்பட்ட இணைப்புத் தொழில்நுட்ப அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் டி வி எஸ் ஐகியூப் ஸ்மார்ட் மற்றும் உங்களது எண்ணங்களுக்கேற்ற வகையில் மாற்றியமைத்து கொள்ளும் வகையில் ஒரு அருமையான நகர்ப்புற பயணத்தை புதிய வரையறைகளுடன் வழங்குகிறது.

இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் டி வி எஸ் ஐகியூப் எலெக்ட்ரிக்-க்கு மாறியிருப்பது இந்தியாவில் எலெக்ட்ரிக் வாகன பயன்பாடு மீது மக்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தை அப்படியே பிரதிபலிப்பது போல் அமைந்திருக்கிறது. உற்சாகமளிக்கும் வகையில் அமைந்திருக்கும் இந்த மின் வாகனங்களுக்கான இந்தப் பயணத்தில், டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் மூன்று முக்கிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது அதில் முதலாவது பவர் ஆஃப் சாய்ஸ். வாடிக்கையாளர்கள் :மின் வாகனம் வாங்க விரும்பும்போது, கனெக்ட்டிவிட்டி அம்சங்களுடன், மனம் கவரும் வண்ணங்களில் தேர்வு செய்யும் விதமாக மின் வாகன தயாரிப்புகளை வழங்குவது. இரண்டாவதாக, ஒரு முழுமையான பீஸ் ஆப் மைண்ட். மின் வாகனத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், வெகு சமீபத்திய விதிமுறைகளை பின்பற்றி, வாகன விநியோகத்தை குறித்த நேரத்தில் வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வாகன வாங்கும் அனுபவத்தை முழுமையானதாக்குவது. அதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மனநிம்மதியை அளிப்பது. மூன்றாவதாக, சிம்ளிசிட்டி ஆப் ஆப்பரேட்டிங். அபாரமான ஆற்றல்மிக்கதாக டி வி எஸ் ஐகியூப் மின் ஸ்கூட்டர் இருந்தாலும் அதை இயக்குவது மிக எளிது, அதே வேளையில் வாடிக்கையாளர்களுக்கு எந்தவித தொந்தரவுகளும் இல்லாதவகையில் தடையின்றி இயங்கக்கூடிய ஒரு மேம்பட்ட தயாரிப்பை வழங்குவது. இந்த மூன்று கொள்கைகளின் அடிப்படையில், தற்போது இந்தியாவில் பரவலாக உள்ள 348 நகரங்களில் 612 டீலர்ஷிப்களின் மூலம் டி வி எஸ் ஐகியூப் ஸ்கூட்டர் கிடைக்கிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
மார்ச் 13, 2024

# டாடா மோட்டார்ஸ் அதன் சனந்த் வளாகத்தில் இருந்து 1 மில்லியனாவது கார் உற்பத்தியாகியுள்ளதைக் கொண்டாடுகிறது




சென்னை, 13 மார்ச் 2024: இந்தியாவின் முன்னணி வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், குஜராத்தின் சனந்தில் உள்ள அதன் அதிநவீன அமைவிடத்தில் இருந்து 1 மில்லியனாவது காரை வெளியிட்டு, அதன் உற்பத்தி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளதை பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த சாதனையானது, நுகர்வோர் மகிழ்ச்சியை உயர்த்தும் சிறந்த தயாரிப்புகளை வழங்குவதற்காக, தொடர்ந்து புதுமைகளை மேற்கொள்வதற்கான டாடா மோட்டார்ஸின் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது. இந்த மைல்கல்லை அடைவதில் முக்கியப் பங்காற்றிய சனந்த் தொழிலகத்தில் உள்ள குழுவின் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பையும் இது பிரதிபலிக்கிறது.

சனந்த் ஆலை 1100 ஏக்கர் - 741 ஏக்கர் (டி எம் எல்) மற்றும் 359 ஏக்கர் (விற்பனையாளர் பூங்கா) பரப்பளவில் 6000 க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக ஊழியர்களுடன் 2010 இல் நிறுவப்பட்டது, இது டாடா மோட்டார்ஸின் வளர்ச்சி மற்றும் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கிறது. டாடா மோட்டார்ஸின் இளைய ஆலைகளில் ஒன்றாக இருப்பதால், சனந்த் அமைவிடம் அதன் அனைத்து செயல்முறைகளிலும் ஒரு நிமிட தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. அதிக இயந்திரமயமாக்கப்பட்ட ஆலை ஒரு லீன் செயல்முறை மேலாண்மை அமைப்பை இணைத்துள்ளது. இந்த ஆலையில் பிரஸ் லைன், வெல்ட் ஷாப், பெயிண்ட் ஷாப், அசெம்பிளி லைன் மற்றும் பவர்டிரெய்ன் ஷாப் ஆகியவை உள்ளன. இந்த வசதி நெகிழ்வான அசெம்பிளி லைனைக் கொண்டுள்ளது மற்றும் டியாகோ, டியாகோ ஏ எம் டி, டியாகொ ஈவி, டியாகொ ஐசிஎன்ஜி, டிகோர், டிகோர் ஏ எம் டி, டிகோர் ஈவி, டிகோர் ஐசிஎன்ஜி மற்றும் எக்ஸ்பிரஸ் - டி ஈ வி போன்ற பயணிகள் வாகனங்களின் பல்வேறு மாடல்களை உற்பத்தி செய்வதில் அறியப்படுகிறது. 100% சொத்து மேலாண்மை மற்றும் பயன்பாட்டுடன் மூன்று மாடல்களை உருவாக்கும் ஒற்றை மாதிரி ஆலை வெற்றிகரமாக பல மாதிரி ஆலையாக மாற்றப்பட்டது.

இந்த முக்கியமான நிகழ்வைப் பற்றி கருத்து தெரிவித்த டாடா மோட்டார்ஸ் பயணிகள் வாகனங்கள் லிமிடெட் மற்றும் டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி லிமிடெட் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர் திரு. ஷைலேஷ் சந்திரா அவர்கள், "எங்கள் சனந்த் ஆலையில் இருந்து 1 மில்லியனாவது காரை வெளியிடுவதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். சந்தைத் தேவைகளுக்கு உடனடியாகப் பதிலளிப்பதன் மூலம் இந்தியாவில் எங்கள் வளர்ச்சிக் கதையை வலுப்படுத்துவதில் இந்த வசதி முக்கியமானதாகத் திகழ்கிறது. இந்தச் சாதனை, எங்களுக்காக நாங்கள் அமைத்துக் கொண்ட உயர் தரத்திற்கும், வாடிக்கையாளர்களிடம் நாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கும் ஒரு சான்றாகும். எங்களின் முயற்சிகள் எங்கள் தயாரிப்புகளுக்கு அதிக மதிப்பளிக்க வழிவகுத்துள்ளன, மேலும் இந்த மைல்கல் நுகர்வோர் மத்தியில் எங்கள் தயாரிப்புகளின் பிரபலத்தை மீண்டும் வலியுறுத்துகிறது. பாதுகாப்பான, புத்திசாலித்தனமான மற்றும் பசுமையான இயக்கத் தீர்வுகளை வழங்குவதில் எங்கள் வேகத்தை முன்னெடுத்துச் செல்வதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த மைல்கல்லுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் ஊழியர்கள், சப்ளையர்கள், சேனல் பார்ட்னர்கள் மற்றும் மிக முக்கியமாக குஜராத் அரசு இந்த மைல்கல்லை அடைவதற்கு ஒருங்கிணைந்த ஆதரவை வழங்கியதை நாங்கள் அங்கீகரிக்கிறோம் மற்றும் அவர்களுக்கு எங்களது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

டாடா மோட்டார்ஸ் எப்போதும் தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் சமூக மேம்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ளது. சனந்த் ஆலை, சனந்த், பாவ்லா & விராம்கம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 68க்கும் மேற்பட்ட கிராமங்களை தத்தெடுத்துள்ளது. கழிப்பறைகள் அமைத்தல், பெண்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்க அவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பெண் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் கல்வி ஆகியவை சனந்தில் அதன் சி எஸ் ஆர் நடவடிக்கைகளைத் தொடங்கிய முக்கிய முயற்சிகளாகும். கடந்த 13 ஆண்டுகளில், டாடா மோட்டார்ஸின் சிஎஸ்ஆர் முயற்சிகள் உச்சத்தை தொட்டுள்ளன சனந்த் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 3 லட்சம் பேர் வாழ்கின்றனர்.

சலுகைகள் மற்றும் கார் வாங்கும் விருப்பங்களைப் பற்றி மேலும் அறிய, உங்கள் அருகிலுள்ள டீலரை அழைக்கவும் அல்லது <https://cars.tatamotors.com/> தளத்தைப் பார்வையிடவும்.

# கிளியர் டிரிப் மிகப்பெரிய கோடைகால விடுமுறையை பயணத்துடன் கொண்டாடுவதற்க்காக இப்பொது உங்களுக்காக - #நேஷன் ஆன் வெகேஷன்




சென்னை, 13 மார்ச் 2024: கோடை காலம் நெருங்கி வருவதால், பிளிப்கார்ட் நிறுவனமான கிளியர்ட்ரிப், அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மார்க்கீ பயண விற்பனையான #நேஷன் ஆன் வெகேஷன் இன் இரண்டாவது பதிப்பை அறிவித்தது. 9-நாள் பயணக் களியாட்டம் மார்ச் 14, 2024 அன்று தொடங்குகிறது மற்றும் ஹோட்டல்கள், விமானங்கள், பேருந்துகள் மற்றும் பேக்கேஜ்கள் ஆகியவற்றில் கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்குவதன் மூலம் பயண அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த உள்ளது. அதிக தேவைக்கு மத்தியில், கோடை சீசனில் விமான கட்டணம் உயர வாய்ப்புள்ளது. #நேஷன் ஆன் வெகேஷன் மூலம், கிளியர் டிரிப் மற்றும் பிளிப்கார்ட் டிராவல் ஆகியவை தங்கள் வாடிக்கையாளர்களுக்கு தங்கள் தளங்களில் சிறந்த சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், அவர்களின் கனவு விடுமுறையை முன்பதிவு செய்யவும் ஒரு வாய்ப்பை வழங்குகின்றன. அதன் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மதிப்புகளுக்கு ஏற்ப, கிளியர் டிரிப், 'கிளியர் சாய்ஸ்' என்ற குடையின் கீழ், அதன் பயனர்களுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது. கிளியர் சாய்ஸ் பிளஸ் மற்றும் கிளியர் சாய்ஸ் மேக்ஸ் மூலம், பயணிகள் தங்களுடைய முன்பதிவுகளை ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம் மற்றும் 2500 ரூபாய் முதல் வழக்கமான விமான மாற்றங்களுக்கு மாறாக முழுப் பணத்தையும் திரும்பப் பெறலாம். மைந்த்ரா மற்றும் பிளிப்கார்ட் லாயல்டி வாடிக்கையாளர்கள் கிளியர் டிரிப் மற்றும் பிளிப்கார்ட் டிராவல் தளங்களில் சிறப்பு சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை எதிர்பார்க்கலாம்.

கோடை காலம் நெருங்கி வருவதால், பிளிப்கார்ட் நிறுவனமான கிளியர்ட்ரிப், அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மார்க்கீ பயண விற்பனையான #நேஷன் ஆன் வெகேஷன் இன் இரண்டாவது பதிப்பை நிகழ்ச்சியில் பேசிய கிளியர் டிரிப் இன் சி ஈ ஓ அய்யப்பன் ராஜகோபால், "பயணிகள் மனதில் பயண வழியை முன்கூட்டியே திட்டமிடும் உணர்வை ஏற்படுத்தும் எண்ணத்தில் #நேஷன் ஆன் வெகேஷன் உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டு நேஷன் ஆன் வெகேஷன் க்கு கிடைத்த வரவேற்பில் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம், மேலும் கோடைகாலத்தை அனைவருக்கும் மறக்கமுடியாத விடுமுறையாக மாற்றும் சலுகைகளுடன் அதை மீண்டும் கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். முன்கூட்டியே திட்டமிட்டு இப்போது முன்பதிவு செய்வதை ஒப்பிடும் போது ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் பிற்பகுதியில் செய்யப்படும் முன்பதிவுகளுக்கான கட்டணங்கள் 20-25% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. க்யூரேட்டட் மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட டீல்கள் மூலம், கோடைகாலப் பயணத்திற்கான இந்தியாவின் விருப்பத்தை முன்பை விட மலிவு விலையில் கொண்டாட விரும்புகிறோம். கிளியர் சாய்ஸ் கட்டணங்கள் மூலம், பயணிகள் கடைசி நிமிட திட்டமிடல் தொடர்பான கவலைகளை நீக்கி, பணத்திற்கான பெரும் மதிப்பை உறுதி செய்யலாம். சிறந்த டீல்களைப் பெறுவதற்கு இப்போதே முன்பதிவு செய்யவும், கட்டணங்களில் ஏற்படும் சாத்தியக்கூறுகளை விட முன்னேறி, சிறந்த பயண அனுபவத்தை அனுபவிக்கவும் வழிவகுக்கிறது.

# தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ.320 குறைவு

சென்னை, 13 மார்ச் 2024: தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ.320 குறைந்து ரூ.48 ஆயிரத்து 880-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தின் விலை கடந்த ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து ஏற்ற இறக்கத்தோடு காணப்படுகிறது.

கடந்த 2 நாட்களாக தங்கம் விலையில் எவ்வித மாற்றமுமின்றி சவரன் ரூ.49 ஆயிரத்து 200-க்கு விற்று வந்த நிலையில், இன்று சற்று குறைந்துள்ளது.

அதன்படி, சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு இன்று ரூ.320 குறைந்து ரூ.48,880-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் கிராமுக்கு ரூ.40 குறைந்து ரூ.6,110-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.1 குறைந்து ரூ.78.50க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# அயோத்தியில் நாள்தோறும் 1 1/2 லட்சம் பக்தர்கள்

சென்னை, 13 மார்ச் 2024: அயோத்தி ராமர் கோவிலில் நாள்தோறும் 1 லட்சத்து 50 ஆயிரம் பக்தர்கள் வரை தரிசனம் செய்து வருவதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம், அயோத்தி கோவிலில் பாலராமர் சிலை பிரதிஷ்டை நிகழ்வு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அயோத்தி கோவிலில் தரிசனம் செய்ய பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. நாள்தோறும் பாலராமரை தரிசிக்க லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். கோவிலில் தொடர்ந்து 45 நாட்கள் நடந்த மண்டல பூஜைகள் மற்றும் ராக சேவை என்னும் இசை வழிபாடு கடந்த 2 நாட்கள் முன் நிறைவடைந்தது.

இந்த நிலையில் அயோத்தி கோவில் நிர்வாகம் இன்று காலை வெளியிட்ட எக்ஸ் பதிவில், அயோத்தி கோவிலுக்கு நாள்தோறும் ஒன்று முதல் ஒன்றரை லட்சம் பக்தர்கள் வரை வருகை தருகின்றனர். காலை 6.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை சுவாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுகிறது.

ஸ்ரீ ராமரை தரிசிப்பதற்கான அனைத்து வழிமுறைகளும் சுலபமாகவே உள்ளது. பக்தர்கள் 60 முதல் 75 நிமிடங்களுக்குள் ஸ்ரீ பாலராமரை தரிசனம் செய்யலாம்.

ஸ்ரீராமரை தரிசிக்க வரும் பக்தர்கள் பூக்கள், மாலைகள், பிரசாதம் கொண்டு வர வேண்டாம் என்று கோயில் அறக்கட்டளை அறிவுறுத்தியுள்ளது.கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்களின் செல்போன், பணம் உள்ளிட்டவை வளாகத்துக்கு வெளியே பாதுகாப்பாக வைத்துவிட்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அயோத்திக்கு வரும் பக்தர்களின் கூட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளது. கோடை விடுமுறை நெருங்குவதால் பக்தர்களின் கூட்டம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த முடியாமல் காவல்துறையினர் திணறி வரும் சூழலில், திருப்பதி தேவஸ்தானம் கையாளும் முறையை பின்பற்ற அயோத்தி கோவில் நிர்வாகத்தினர் ஆலோசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அயோத்தி கோவில் உண்டியல் வருமானம் 25 கோடி ரூபாய்க்கு வசூலானது. மேலும் 25 கிலோ தங்க ஆபரணங்கள் உட்பட வெள்ளி பொருட்களும் அயோத்தி குழந்தை ராமருக்கு காணிக்கையாக செலுத்தப்பட்டுள்ளன.

குழந்தை ராமருக்கு நாள்தோறும் காலை 6.30 மணிக்கு காட்டப்படும் ஆரத்தியை 'தூர்தர்ஷன் நேஷனல்' தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்ப செய்யப்பட உள்ளது. ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின்படி, ராமர் கோவில் வளாகத்தின் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் தெரிவித்துள்ளது.

# ஐ சி ஏ ஐ டிசம்பர் 2023 சி ஏ தேர்வு முடிவுகளை அறிவிக்கிறது ஐ ஐ சி லக்ஷ்யாவில் 65% தேர்ச்சி விகிதம்

Indian Institute of Commerce Lakshya

சென்னை, 13 மார்ச் 2024: இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ஐ சி ஏ ஐ) டிசம்பர் 2023 சி ஏ தேர்வு முடிவுகளை அறிவித்துள்ளது. தேர்ச்சி சதவீதம் நாடு முழுவதும் 29.99% ஆகவும், குறிப்பாக ஐஐசி லக்ஷ்யாவின் விண்ணப்பதாரர்களுக்கு 65% அதிகமாகவும் பதிவாகியுள்ளது. லக்ஷ்யாவில் இருந்து 727 பேர் தேர்ச்சி பெற்றனர், மேலும் 41,132 பேர் நாடு தழுவிய தேர்விலும் தேர்ச்சி பெற்றனர்.

இந்தியா முழுவதும் மொத்தம் 1,37,153 விண்ணப்பதாரர்கள் தேர்வெழுதினர், 1,131 விண்ணப்பதாரர்கள் இந்திய வர்த்தக நிறுவனத்தில் (ஐஐசி லக்ஷயா) பங்கு பெற்றனர்.கேரளாவில் வணிகவியல் கல்வியை மாற்றுவதில் முன்னணியில் உள்ள இந்திய வர்த்தக நிறுவனம் லக்ஷயா, மாணவர் சேர்க்கைகளை அறிவித்துள்ளது இது ஏப்ரல்2024 இல் தொடங்குகிறது.

# டாடா மோட்டார்ஸ் ஏப்ரல் 2024 முதல் தனது வர்த்தக வாகனங்களின் விலையை உயர்த்தவுள்ளதை அறிவித்துள்ளது

சென்னை, 13 மார்ச் 2024: இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், அதன் வர்த்தக வாகனங்களின் விலையை ஏப்ரல் 1, 2024 முதல் 2% வரை உயர்த்தவுள்ளதை அறிவித்துள்ளது. கடந்த கால உள்ளீட்டுச் செலவுகளின் எஞ்சிய தாக்கத்தை ஈடுகட்டவே இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்படுகிறது . தனிப்பட்ட மாடல் மற்றும் மாறுபாட்டின் படி விலை உயர்வு மாறுபடும் என்றாலும், வணிக வாகனங்களின் முழு வரம்பிற்கும் இது பொருந்தும்.